கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைகலாச்சார பீடம்

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக்கலைமாணித் தேர்வு – 2011/2012 (பெப்ரவரி/மார்ச், 2014)

# ECOS 3102 Financial Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

யாதாயினும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. (அ) ஏன் முதலீட்டுத் தீர்மானங்கள் பிரதானமானவை? காரணங்கள் தருக (05 புள்ளிகள்)

(ஆ) முதலீட்டிற்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான தொடர்பு யாது? ஆராய்க. (08 புள்ளிகள்)

(இ) நீர் A மற்றும் B ஆகிய இரண்டு பிணைச்சொத்துக்களில் முதலிடத் தீர்மானித்துள்ளீர் எனக் கருதுக. 15% எதிர்பார்க்கப்படும் வருமானத்தினுடைய பங்கு A யில் நீர் உமது பணத்தில் 30% த்தையும், 12% எதிர்பார்க்கப்படும் வருமாத்தினுடைய பங்கு B யில் நீர் உமது பணத்தில் 70% த்தையும் முதலிடத் தீர்மானிப்பீராயின்,

(i) எப் பங்கில் நீர் முதலிடுவது கூடிய இலாபத்தைத் தரும்?
(ii) இம் முதலீட்டுப் பட்டியலில் எதிர்பார்க்கப்படும் வருவாய் வீதம் யாது?

(12 புள்ளிகள்)

02. (அ) முன்னிலை உடன்படிக்கை ஒன்றில் நட்ட அச்சத்தின் தாக்கம் யாது? (05 புள்ளிகள்)

(ஆ) முன்னிலை உடன்படிக்கையில் இருந்து எதிர்கால உடன்படிக்கை எவ்வகையில் வேறுபடுகின்றது? காரணங்கள் தருக. (08 புள்ளிகள்)

(இ) பின்வரும் அட்டவணை புசல் ஒன்றிற்குரிய நெல்லின் விலை தொடர்பான எதிர்கால் உடன்படிக்கையாகும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | மாதம் | 15ஆம் | திகதி | ரூ. | 250.30 | சதம் |
| மே | மாதம் | 16ஆம் | திகதி | ரூ. | 250.80 | சதம் |
| மே | மாதம் | 17ஆம் | திகதி | ரூ. | 251.20 | சதம் |
| மே | மாதம் | 18ஆம் | திகதி | ரூ. | 251.10 | சதம் |
| மே | மாதம் | 19ஆம் | திகதி | ரூ. | 248.00 | சதம் |

புசலொன்றிற்கு ரூ.250 படி எதிர்கால உடன்படிக்கையின் கீழ் மே மாதம் 15ஆம் திகதி நெல்லினை நீர் கொள்வனவு செய்வீராயின்,

(i) மே மாதம் 18ஆம் திகதி புசலொன்றுக்கான நெல்லிற்குரிய விற்பனை விலை என்ன?

(ii) மேற்குறித்த காலப்பகுதியில், புசல் ஒன்றுக்கான நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு நீர் செலுத்திய விலை என்ன?

(iii) மே மாதம் 19ஆம் திகதி அன்று புசல் ஒன்றுக்கான நெல்லின் விற்பனை விலை என்ன?

(12 புள்ளிகள்)

03.(அ) "பணத்தின் காலப் பெறுமதி" என்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது? உதாரணம் தருக.

(05 புள்ளிகள்)

(ஆ) பணத்தின் காலப் பெறுமதிக்கும் வட்டி வீதத்திற்கும் இடையிலான தொடர்பினை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) நாதன் என்பவர் காணியொன்றை ரூ.85,000/= க்குக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளார் என்க. அடுத்த ஆண்டு அக்காணியின் பெறுமதி ரூ.91,000/= என அவர் அறிந்துள்ளமையால் ரூ 6000/= ஐ அவர் இலாபமாகப் பெறுவார்.

வங்கி வட்டி வீதம் 10% ஆயின் நாதன் காணியைக் கொள்வனவு செய்ய வேண்டுமா? உமது விடையை விளக்குக.

(12 புள்ளிகள்)

04.(அ) கொள்வனவுத் தெரிவுரிமைகள் என்றால் என்ன? உதாரணங்கள் தருக.

(05 புள்ளிகள்)

(ஆ) எச்சந்தர்ப்பத்தில் கொள்வனவுத் தெரிவுரிமை ஒன்றைக் கொள்வனவு செய்தல் இலாபகரமானது? விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) யூலை 30ஆம் திகதி அன்று ABC கம்பனியில் பங்கொன்றின் சந்தை விலை ரூ.25 ஆகும். இப்பங்குகள் தொடர்பான தெரிவுரிமைகள் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன என்க. ஒக்டோபர் 30ஆம் திகதி அன்று முதிர்வடையும் கொள்வனவுத் தெரிவுரிமை ஒன்றின் பிரயோக விலை ரூ.30 ஆகவும், அதன் கொள்வனவு வட்டம் ரூ 2/= ஆகவும் உள்ளதென்க. ஆயின், பங்கொன்றின் சந்தை விலைக்கமைய இம் முதலீடு இலாபகரமானதா? உமது விடையினை விளக்குக.

(12 புள்ளிகள்)

05. (அ) நிதிப் பொருளியலை எவ்வாறு வரையறுப்பீர்?

(05 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் நிதிச்சந்தையின் கடந்த 5 ஆண்டு காலப் போக்கினை விமர்சன ரீதியாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

(இ) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் நிதிச் சந்தை தொடர்பான செயலாற்றங்களை மதிப்பிடுக.

(12 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றில் யாதாயினும் ஐந்திற்குக் குறிப்பெழுதுக.

(i) பிணைப் பெறுமதியினை மதிப்பிடல்

(ii) மூலதனச் செலவு

(iii) திரவத் தன்மை

(iv) பகிரங்கச் சந்தை நடவடிக்கைகள்

(v) மில் லங்கா விலைச்சுட்டெண்

(vi) தன்னியக்க டெலர் இயந்திரம் (ATM)

(5x5=25 புள்ளிகள்)